பூம்புகாரில் சுற்றுலா விடுதி.

*215 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பூம்புகாரை சுற்றுலாவுக்குரிய இடமாக அறிவித்து அங்கு சுற்றுலா விடுதியொன்றை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, பூம்புகாரின் தொன்மைச் சிறப்பை விளக்கும் வகையில் பூம்புகார் அபிவிருத்திக்காக பணியாற்றும் தனி அலுவலர் பெரும் திட்டமொன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அந்தத் திட்டம் வந்தவுடன் அதற்கான அம்சங்களை அறிந்து இறுதி வடிவம் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 216, 217, 218, 219 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

A.V.M. Canal in Kanyakumari district.

* 220 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to reconstruct the A. V. M. Canal in Kanyakumari district?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :—கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா கால்வாய்க்கு (A.V.M. Canal) முக்கிய சீரமைப்புகள் செய்வது குறித்து (பாசனத்) தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்து வருகிறார்.

வட்டமலைக்கரை ஓடை நீரை விவசாயத்திற்குப் பயன் படுத்தல்.

*221 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வெள்ளகோவில் வட்டாரம், நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி கடையபாளையத்துக்கு பக்கத்தில், வட்டமலைக்கரை ஓடையில் விவசாயத் திற்கான ஆய்வு வேலைகள் முடிந்து விட்டனவா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 74 லட்சம் உத்தேச மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க அரசு தீர்மானித்துள்ளது. விரைவிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.